பருவம்: மூன்றாம் பருவம்

பாடம் -3

உள்ளங்கையில் ஓர் உலகம்

அ. கடினச் சொற்கள்

1.மின்னஞ்சல் 9.புலனம்

2.முகநூல் 10.உலகு

3.சோர்வு 11.இணையம்

4.கடிதம் 12.தகவல்

5.களஞ்சியம் 13.தரணி

6.கணினி. 14. ஏற்றம்

7.கண்ணாடி 15.உள்ளங்கை

8.ஓய்வு 16. ஓவியம்

ஆ. சொற்பொருள்

1. தரணி –உலகம்

2. சோர்வு– களைப்பு

3.ஏற்றம் –உயர்வு

4.துணைபுரிவேன்– உதவுவேன்

5. தகவல் களஞ்சியம்– அனைத்து விவரங்களும் அடங்கியது.

இ.சரியான விடையைத் தெரிவு செய்க.

1.ஏற்றம் என்ற சொல்லின் பொருள் ____________
. (அ) சோர்வு. (ஆ) தாழ்வு
. (இ) உயர்வு. (ஈ) இறக்கம்
விடை:இ) உயர்வு

2.என்று + இல்லை – இச்சொல்லைச் சேர்த்து எழுதக்

கிடைப்பது –
(அ) என்றில்லை. (ஆ) என்றும் இல்லை
(இ) என்று இல்லை. (ஈ) என்றல்லை
விடை:(அ) என்றில்லை

3.முன்னே என்ற சொல்லின் எதிர்ச்சொல் –
(அ) எதிரே. (ஆ) பின்னே
(இ) உயரே. (ஈ) கீழே
விடை: (ஆ) பின்னே

4.கணினி ________வழியே அனைவரையும் இணைக்கிறது.
(அ) தகவல் களஞ்சியம். (ஆ) செய்தி
(இ) கடிதம். (ஈ) இணையம்
விடை: (ஈ) இணையம்

5. வேறுபட்ட ஒன்று எது?___________

அ.மின்னஞ்சல் ஆ.புலனம்

இ.முகநூல் ஈ.கண்ணாடி

விடை :(ஈ)கண்ணாடி

ஈ.பொருத்தமான சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.

1. தண்ணீர், மீன், ஒற்றைக்கால் —- கொக்கு

2. இரவு ,வானம், வட்டம் —-- நிலா

3. மீசை, பால், மியாவ். — பூனை

4. கிளை, நிழல், பழம் — மரம்

5. வீடு, கதவு, பாதுகாப்பு —பூட்டு

6. கதவு, பூட்டு, கூரை. —- வீடு

7. மணல், மீன், கப்பல் —- கடல்

# இலக்கணம்: திணை

உயர்திணை – மனிதர்களை உயர்திணை என்று கூறுவர்.
உயர்திணைப் பெயர்கள் – மனிதர்களைக் குறிக்கும் அம்மா, அப்பா, அண்ணன், அத்தை, பெரியப்பா, மீனா, ரோசி, பாபு, போன்ற
பெயர்கள் உயர்திணைப் பெயர்கள் ஆகும்.

அஃறிணை – மனிதர் அல்லாத உயிருள்ள மற்றும் உயிரற்றவற்றை அஃறிணை என்று கூறுவர்.

அஃறிணைப்பெயர்கள் – பூனை, நாய், மாடு, ஆடு, நாற்காலி, மேசை, குடம், மின்விசிறி போன்ற பெயர்கள் அஃறிணைப்பெயர்கள் ஆகும்.

| உயர்திணைப் பெயர்கள் | அஃறிணைப்பெயர்கள் |
|---|---|
| 1. நீலா | 1.நாய்க்குட்டி |
| 2.அத்தை | 2.கன்றுக்குட்டி |
| 3.மாமா | 3.ஆடு |
| 4.பாட்டி | 4.பூக்கள் |
| 5.ஆசிரியர் | 5.கொய்யா மரம் |
| 6.குழந்தைகள் | 6.மாடு |
| 7.மருத்துவர் | 7.பறவைகள் |
| 8.அப்பா | 8.சிங்கம் |

பாடம் **- 4**

நட்பே உயர்வு

அ.கடினச் சொற்கள்

1.நண்பன்
2.நெடுநாள்
3.இரண்டு
8.முயல்
9.விலங்குகள்
10.சந்தேகம்

| | |
|---|---|
| 4.ஆபத்து | 11.வண்ணம் |
| 5.பதட்டம் | 12.ஆபத்து |
| 6.திட்டம் | 13.குழப்பம் |
| 7.உயர்வு. | 14.மகிழ்ச்சி |

ஆ. சரியான விடையைத் தேரிவு செய்க.

இ.முறை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.

1.நண்பா மான் செல்கிறாய் எங்கே?
மான் நண்பா எங்கே செல்கிறாய்?
2. தம் எண்ணி நட்பினை இருவரும் மகிழ்ந்தனர்?
இருவரும் தம் நட்பினை எண்ணி மகிழ்ந்தனர்.
3. உன்னை வா செல்கிறேன் அழைத்துச்
வா உன்னை அழைத்துச் செல்கிறேன்.

ஈ. வினா-விடை
1. பசியோடு இருந்தது எது?
விடை :பசியோடு இருந்தது நரி ஆகும்.
2. யாருக்கு ஆபத்து வந்ததாக நரி கூறியது?
விடை: முயலுக்கு ஆபத்து வந்ததாக நரி கூறியது.
3. முயல் தூரத்தில் வருவதைப் பார்த்துவிட்ட நரி என்ன செய்தது?
விடை: முயல் தூரத்தில் வருவதை பார்த்து விட்ட நரி, முயலை மான் பார்த்து விடாத
வண்ணம் பேச்சு கொடுத்தவாறே வேகத்தை அதிகரித்தது.
4. மானும் முயலும் நரியிடமிருந்து தப்பிச் சென்றனவா? எவ்வாறு?
விடை: ஆம்! இருவரும் இரு வேறு திசைகளில் வேகமாக ஓடத் தொடங்கினர்.